**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3627 /அ3/2023, நாள்.08.09.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – 2023–2024 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு கல்வியியல் படிப்பு பயிலும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல் சார்பாக அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.050183/இநேமுஉ/2023, நாள். 08.09.2023

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல் முறைகளுக்கிணங்க பி.எட்., எம்.எட்., பயிலும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் பயிற்சிக்காக சுமார் 80 நாட்கள் அரசு பள்ளிகளுக்கு செல்கின்றனர் . கடந்த ஆண்டு முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் (TNTEU) வழிகாட்டுதலுடன் பள்ளிக் கல்வித்துறை இயக்குநரகத்தால் அரசு மற்றும் அரசு உதவி பள்ளிகளுக்கு இந்த பயிற்சி மாணவர்களுக்கான பள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒதுக்கப்பட்ட பயிற்சி மாணவர் களின் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. இப்பட்டியல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் வழியாக அந்தந்த கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் ஒவ்வொரு பள்ளிக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுமே பள்ளி கல்வித் துறை இயக்குநரகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வொதுக்கீட்டில் தேவைப்படும் எண்ணிக்கையைவிட கூடுதலாக உள்ள ஆசிரியர் பயிற்சி மாணவர்களை அருகில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் அளவிலேயே நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது . ஆசிரியர் பயிற்சி மாணவர்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிக்கும் அருகிலுள்ள நடுநிலைப்பள்ளிக்கும் இரு பிரிவுகளாக பிரித்து சுழற்சி முறையில் அனுப்பி கற்றல் கற்பி த்தல் பயிற்சியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது . ஆசிரியர் பயிற்சி மாணவர்களை கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கென எந்த பள்ளிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரே அவர்களுக்கு உரிய சான்றிதழ்களை வழங்க வேண்டும்.

பயிற்சி மாண வர்கள் செப்டம்பர் 11 முதல் சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு வரத் தொடங்குவார்கள் அவர்களை பள்ளிகளில் பயனுள்ள வகையில் உரிய பயிற்சியில் ஈடுபடு த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த அறிவுரைகள் அரசு உதவிபெறும் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பட்டியல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

**பெறுநர்**
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

**நகல்**

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்.